


மும்பையில், உலகளாவிய கடல்சார் இந்திய உச்சிமாநாடு 2023, அக்டோபர் 17 முதல் 19 வரை நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. தமிழ்நாட்டிற்கான தனி அமர்வில், தமிழ்நாடு பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு கலந்து கொண்டு, நேற்று முன்தினம் (17.10.2023) மாலை உரையாற்றினார். இந்த அமர்வில், சென்னை துறைமுக ஆணையம் மற்றும் காமராஜர் துறைமுகத் தலைவர் சுனில் பாலிவால், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் பிரதீப் யாதவ், தமிழ்நாடு மின் பகிர்மானக் கழகத்தின் மேலாண்மை இயக்குநர் மற்றும் தலைவர் ராஜேஷ் லக்கானி, தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகத்தின் இயக்குநர் சந்தீப் நந்தூரி மற்றும் ஒன்றிய, மாநில அலுவலர்கள் பங்கு பெற்றனர்.

### தமிழ்நாடு முதல்வர் - முதலீட்டுக்குச் சாதகமான சூழ்நிலையை உருவாக்குவதில் முனைப்பாக இருக்கிறார்!

# உலக முதலீட்டாளர்கள் தமிழ்நாட்டில் அதிகமாக முதலீடு செய்திட வாரீர்!

## மும்பையில் நடைபெற்ற - உலகளாவிய கடல்சார் இந்திய உச்சி மாநாட்டில் அமைச்சர் எ.வ.வேலு உரை!

மும்பை, அக்.19-

மும்பையில் நடைபெறும், உலகளாவிய கடல்சார் இந்திய உச்சி மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றிய தமிழ்நாடு பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு, "தமிழ்நாட்டில் எங்கள் முதல்வர் அவர்கள், முதலீட்டுக்கு நல்ல சிறப்பான, சாதகமான சூழ்நிலையை உருவாக்கித் தருவதில் முனைப்பாக இருக்கிறார். எனவே, உலக முதலீட்டாளர்கள் தமிழ்நாட்டில் அதிகமாக முதலீடு செய்ய வருமாறு, எங்கள் முதல்வர் அவர்கள் சார்பில் அன்போடு அழைக்கிறேன்" என்று குறிப்பிட்டார்.

உலகளாவிய கடல்சார் இந்திய உச்சிமாநாடு2023 மும்பையில் அக்டோபர் 17 முதல் 19 வரை, நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இந்த மாநாட்டின் முதல் நாளான நேற்று முன்தினம் (17.10.2023), கடலோர மாநிலங்களின் முதலமைச்சர்கள் மற்றும் சிறு துறைமுகங்களுக்குப் பொறுப்பு வகிக்கும் அமைச்சர்கள் பங்கு பெற்றுள்ளனர். தமிழ்நாட்டின் சார்பாக, பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு கலந்து கொண்டார்.

ஒவ்வொரு மாநிலத்திற்கும், தனித்தனி அமர்வுகள் ஏற்படுத்தி, அந்தந்த மாநிலங்களில் முதலீட்டு வாய்ப்புகள், மாநிலத்திற்கான வளர்ச்சித் திட்டம், இணைப்பு நெட்வொர்க்குகள், முற்போக்கான உள்கட்டமைப்பு மற்றும் எளிதான வியாபாரம் போன்றவை தொடர்பாக விவாதிக்கப்பட்டது.

தமிழ்நாட்டிற்கான தனி அமர்வில், நேற்று முன்தினம் மாலை 4.00 மணி முதல் 5.30 மணி வரை, தமிழ்நாடு பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு, தலைமையில் விவாதம் தொடங்கியது.

தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகத்தின் இயக்குநர் சந்தீப் நந்தூரி வரவேற்புரையைத் தொடர்ந்து, அமைச்சர் எ.வ.வேலு உரையாற்றியதாவது :-

தமிழ்நாடு சிறப்பு அரங்கில், பங்குபெற்ற ஒன்றிய மற்றும் மாநில அரசு அலுவலர்கள் மற்றும் உலகளாவிய துறை முகம் மற்றும் கடல்சார் நிபுணர்கள், முதலீட்டாளர்கள் அனைவரையும் வரவேற்கிறேன்.

இன்றைய உலக நடப்பில், அனைத்து நாடுகளின் வர்த்தகமும் நீர்வழிகளையே நம்பியுள்ளது. சுமார் 80 சதவீதம், சர்வதேச சரக்குகள் கப்பலின் வழியே பயணிக்கின்றன. ஆசிய நாடுகளில், சுமார் 64 சதவீதம் இறக்குமதி சரக்குகளும், 42 சதவீதம் ஏற்றுமதிச் சரக்குகளும் கையாளப்படுகின்றன.

பண்டைய காலங்களில், தமிழ்நாடு, கடல்சார் வர்த்தகத்தில் மிக முக்கிய பங்காற்றியுள்ளது. சோழர் காலத்தில் கடல்சார் வர்த்தகத்தில் தமிழ்நாடு மையமாக திகழ்ந்துள்ளது. கொற்கை, அழகன்குளம், பூம்புகார், நாகப்பட்டினம், கடலூர் ஆகிய துறைமுகங்கள் உலகின் பல்வேறு பகுதிகளில் உள்ள துறைமுகங்களுடன் வர்த்தகத் தொடர்பைக் கொண்டிருந்தன. நம் முன்னோர்கள் கடல்சார் வணிகத்தின் முக்கியத்துவத்தை அறிந்து வைத்து செயல்பட்டுள்ளார்கள்.

தமிழ்நாடு, 1,076 கிலோ மீட்டர் நீளம் கொண்ட கடற்கரையைக் கொண்டுள்ளது. இந்தியாவின் கடல்சார் செயல்பாடுகளில், தமிழ்நாடு மிக முக்கிய பங்காற்றி வருகின்றது. சர்வதேச கடல் வணிக பாதையின் அருகில், தமிழ்நாடு கடற்கரை அமைந்துள்ளது. இந்தியாவின் சிறப்புமிக்க சென்னை, எண்ணூர், தூத்துக்குடி ஆகிய மூன்று பெரும் துறைமுகங்கள் தமிழ்நாட்டில் அமைந்துள்ளன.

இந்த பெரும் துறைமுகங்களுடன், அறிவிக்கப்பட்டுள்ள 17 சிறு துறைமுகங்களும் உள்ளன. குறிப்பாக, காட்டுப்பள்ளித் துறைமுகம், பெரும் துறைமுகங்களுக்கு இணையாக செயல்பட்டு வருகிறது.

உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு வர்த்தகங்களுடன் சிறு துறைமுகங்கள் முக்கியப் பங்காற்றி, வளர்ந்துவர மிகச் சாதகமான சூழ்நிலை தமிழ்நாட்டில் உள்ளது.

இந்திய கடல்சார் வளர்ச்சியில், தமிழ்நாடு முன்னணியில் உள்ளது. கடல்சார் வணிகம் என்பது வெறும் சரக்குப் போக்குவரத்து மட்டுமல்ல; நிலையான வளர்ச்சி, வேலைவாய்ப்பை உருவாக்குதல், தொழில்நுட்ப முன்னேற்றம் ஆகியவைகளையும் உள்ளடக்கியது.

இந்தியாவை உலக அளவில் கடல்சார் வர்த்தகத்தின் முதன்மையிடத்தில் கொண்டு செல்ல, நம் முன்னெடுப்புகள் பேருதவியாக உள்ளன. மேலும், உலக முதலீட்டாளர்கள் அனைவரும் தமிழ்நாடு கடல்சார் வாரியத்தின் திட்டங்களில், முதலீடு செய்ய வேண்டும்.

இந்த அரங்கில் உள்ள அனைத்து முதலீட்டாளர்களிடம், தமிழ்நாட்டில் கடல்சார் கட்டமைப்பில் பல்வேறு வளர்ச்சி மற்றும் இணைந்து செயல்படும் வாய்ப்புகள் உள்ளன. இந்தியாவின் கிழக்கு மற்றும் மேற்கு கடற்கரைப் பகுதியைக் கொண்ட கடல் பகுதியில் ஒரு நுழைவு வாயிலாக உள்ளது.

தமிழ்நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு, தமிழ்நாடு கடல்சார் வாரியம் முக்கியப் பங்காற்றுகிறது. முதலீட்டாளர்கள் தமிழ்நாட்டில் அதிகமாக முதலீடு செய்வதை, தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பெரிதும் விரும்புகிறார். எங்கள் முதலமைச்சர் அவர்கள் முதலீட்டுக்கு நல்ல சிறப்பான சாதகமான சூழ்நிலையை உருவாக்கித் தருவதில் முனைப்பாக இருக்கிறார் என்பதால், உலக முதலீட்டாளர்கள், தமிழ்நாட்டில் அதிகமாக முதலீடு செய்யும்படி, தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் சார்பாக, கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், ஔவையார் பாடிய கொன்றைவேந்தனில் "திரைகடல் ஓடியும் திரவியம் தேடு" என்ற முதுமொழிக்கேற்ப, தமிழ்நாட்டில் முதலீடு செய்து திரவியம் தேட நல்ல காலச்சூழ்நிலை உள்ளது. இதனைப் பயன்படுத்தி, தமிழ்நாட்டில் முதலீடு செய்ய வேண்டும்.

எங்கள் முதலமைச்சர் அவர்கள், வரும் 2024 ஜனவரி மாதம் 7 மற்றும் 8 ஆம் தேதிகளில், சென்னையில், உலக முதலீட்டாளர்கள் மாநாட்டினை நடத்தத் திட்டமிட்டுள்ளார். இங்கு வந்துள்ள அனைத்து முதலீட்டாளர்களையும், இம்மாநாட்டில் கலந்து கொள்ள, தமிழ்நாடு முதலமைச்சர் சார்பாக அன்புடன் அழைக்கிறேன். முதலீட்டாளர்களின் முக்கிய இடமாக தொன்றுதொட்டு தமிழ்நாடு இருந்துள்ளது.

இவ்வாறு அமைச்சர் எ.வ.வேலு தெரிவித்தார்.

இந்த மாநாட்டில், தமிழ்நாட்டிற்கான அமர்வில், சென்னை துறைமுக ஆணையம் மற்றும் காமராஜர் துறைமுகத் தலைவர் சுனில் பாலிவால், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் பிரதீப் யாதவ், தமிழ்நாடு மின் பகிர்மானக் கழகத்தின் மேலாண்மை இயக்குநர் மற்றும் தலைவர் ராஜேஷ் லக்கானி, யோகோஹாமா டயர்ஸ் நிர்வாக துணைத் தலைவர் பத்மகுமார், இரயில் மற்றும் உள்நாட்டு முனையங்கள் துணைத் தலைவர் அதெந்த்ரு ஜெயின், APACTECO வணிக மேம்பாடு மற்றும் விற்பனை இயக்குநர் நிகில் கார்க், ACME குழுமத்தின் தலைமை இயக்க அதிகாரி சந்தீப் காஷ்யப், PSA இந்திய நிறுவனத்தின் மூத்த ஆலோசகர் கேப்டன் சுரேஷ் அமிரபு, JSW திட்டங்கள் செயல் துணைத்தலைவர் ராகேஷ் சிசோடியா, ஹூண்டாய் மோட்டார்ஸ் நிறுவன பிராந்திய விற்பனைத் தலைவர் சௌரப் ஷஹாபுர்கர் ஆகியோர்கள் விவாதத்தில் கலந்து கொண்டார்கள்.

தமிழ்நாடு கடல்சார் வாரியத்தின் மாநில துறைமுக அலுவலர் கேப்டன் எம்.அன்பரசன் நன்றியுரையாற்றினார்.

### தமிழ்நாடு முதலமைச்சர் ஆலோசனையின்படி

# மத்திய தரைக்கடல் வாழ் தமிழர்கள் போர்ச் சூழலில் இருந்து பாதுகாப்பாக மீட்பு !

## அயலக தமிழர் நலவாரியத் தலைவர் கார்த்திகேய சிவசேனாபதி பெருமிதம்!

திருப்பூர், அக்.19-

உலகத் தமிழர்கள் மீது அளவற்ற பாசமும், நேசமும் கொண்ட நமது தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆலோசனையின்படி மத்திய தரைக்கடல் வாழ் தமிழர்களை போர்ச் சூழலில் இருந்து பாதுகாப்பாக மீட்டு வர கண் துஞ்சாது பாடுபட்டு வருகிறோம் என அயலக தமிழர் நலவாரியத் தலைவர், கழக சுற்றுச்சூழல் அணி மாநில செயலாளர் கார்த்திகேய சிவசேனாபதி பெருமிதத்துடன் கூறினார்.

இஸ்ரேல் - பாலஸ்தீனம் நாடுகளுக்கு இடையேயான போர் தற்போது தீவிர மடைந்து வரும் நிலையில் தமிழர்கள் பலர் தாயகம் திரும்ப இயலாமல் அங்கு சிக்கித் தவிக்கின்றனர். தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி அங்குள்ள தமிழர்களுக்கு உதவிடும் வகையில் தமிழ்நாடு அரசு சார்பில் உதவி எண்கள் வெளியிட்டு அவர்களது விவரங்கள் சேகரிக்கப்பட்டு ஒன்றிய அரசின் வெளியுறவுத்துறை அமைச்சகத்திடமும், இஸ்ரேலில் உள்ள இந்திய தூதரகத்திடமும் பகிரப்பட்டு அவர்களை தாயகம் மீட்கும் பணியைச் செய்து வருகிறோம் மேலும் கைபேசி புலனக் குழு (வாட்சப் குழுக்கள்) அமைக்கப்பட்டு அங்குள்ள தமிழர்களின் நிலை தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு வருகிறது.

இந்நிலையில் இஸ்ரேல் நாட்டில் சிக்கித் தவித்த தமிழர்களில் தாயகம் திரும்புவதற்காக பதிவு செய்த நபர்களில் கோயம்புத்தூர், திருவாரூர், கடலூர், திருச்சி, தேனி, கரூர், விருதுநகர், நாமக்கல், புதுக்கோட்டை, காஞ்சிபுரம், சென்னை முதலிய மாவட்டங்களைச் சேர்ந்த 21 தமிழர்கள் ஒன்றிய அரசின் ஆபரேஷன் அஜய் திட்டம் மூலம் முதற்கட்டமாக 12.10.2023 அன்று இஸ்ரேலில் இருந்து புறப்பட்டு சிறப்பு விமானத்தில் 13.10.2023 அன்று காலை 6 மணிக்கு புது டெல்லி வந்தடைந்தனர். புது டெல்லி விமான நிலையத்தில் தமிழ்நாடு அரசின் அயலக நலத்துறை சார்பில் வரவேற்பு மையம் அமைக்கப்பட்டு அவர்களுக்கு உணவு ஏற்பாடுகள் செய்துள்ளோம். மேலும் தமிழ்நாடு அரசு செலவில் விமான பயண சீட்டுகள் ஏற்பாடு செய்யப்பட்டு 14 நபர்கள் சென்னை விமான நிலையத்திற்கும், 7 நபர்கள் கோயம்புத்தூர் விமான நிலையத்திற்கும் வந்தடைந்தனர்.

சென்னை விமான நிலையத்திற்கு வந்தடைந்த 14 தமிழர்களையும், தமிழ்நாடு அரசின் சார்பில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்ரமணியன், பாராளுமன்ற உறுப்பினர் மரு.கலாநிதி வீராசாமி, அயலகத் தமிழர் நலத்துறை ஆணையர் ஜெசிந்தா லாசரஸ் ஆகியோர் வரவேற்று, அவர்களது சொந்த ஊர்களுக்குச் செல்ல வாகன வசதி ஏற்பாடு செய்து அனுப்பி வைத்தோம்.

கோயம்புத்தூர் விமான நிலையம் வந்தடைந்த 7 தமிழர்களையும், கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சியர் வரவேற்று அவர்களது சொந்த ஊர்களுக்கு அனுப்பி வைத்தார். உலகத் தமிழர்கள் மீது அளவற்ற பாசமும், நேசமும் கொண்ட நமது தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆலோசனையின்படி மத்திய தரைக்கடல் வாழ் தமிழர்களை போர்ச் சூழலில் இருந்து பாதுகாப்பாக மீட்டு வர கண் துஞ்சாது பாடுபட்டு வருகிறோம் என அயலக தமிழர் நலவாரியத் தலைவர், கழக சுற்றுச்சூழல் அணி மாநில செயலாளர் கார்த்திகேய சிவசேனாபதி பெருமிதத்துடன் கூறினார்.





